# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

## <u>பணி நிறைவு சான்றிதழுக்கு பரிந்துரை செய்ய ரூ.6,000/- லஞ்சம் கேட்டு பெற்ற நகராட்சி வருவாய் ஆய்வாளர் கைது</u>

புகார்தாரர் திரு.சர்புதீன், பொதக்குடி, கூத்தாநல்லூர் தாலுகா, திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தனது தம்பி மனைவிக்கு சொந்தமான இடத்தில் இரண்டு கடைகளை கட்டி வந்தார் அந்த இரண்டு கடைகளுக்கும் மன்னார்குடி நகராட்சியில் பணி நிறைவு சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பணி நிறைவு சான்றிதழ் பெற பரிந்துரை செய்வதற்காக திரு.தனபால், மன்னார்குடி நகராட்சி வருவாய் ஆய்வாளர் தனக்கு லஞ்சமாக ரூ.6,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவாரூர் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 07.12.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.தனபால், மன்னார்குடி நகராட்சி வருவாய் ஆய்வாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.6,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.